**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அசல் வழக்கு எண். 83/2024 நாள்– 05.11.2025

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.இரா.கோகிலாவாணி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– முத்துமாரி(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 18.05.2024 – 1ம் வாதியின் மனுவை 2ம் பிரதிவாதி தள்ளுபடி செய்ததற்கான குறிப்புரை – நகல் – **வா.சா.ஆ.1**

2) 1 ம் வாதியும், கணவர் சுந்தரராஜனும் குடும்பத்துடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் – அசல் – **வா.சா.ஆ.2**

3) இறந்த சுந்தரராஜனின் மாற்றுச்சான்றிதழ் – அசல் – **வா.சா.ஆ.3**

4) 17.02.1984 – சுந்தரராஜனின் இருப்பிட சான்றிதழ் – நகல் – **வா.சா.ஆ.4** (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

5) சுந்தரராஜன் உயிருடன் இருக்கும் வரையில் எழுதிய நோட்டு – நகல் – **வா.சா.ஆ.5** (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

6) சுந்தரராஜனின் பழைய குடும்ப அட்டை – நகல் – **வா.சா.ஆ.6.** (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

7) சுந்தரராஜனின் டிரைவிங் லைசன்ஸ் – நகல் – **வா.சா.ஆ.7** (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**